# அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்பு



www.e-thaksalawa.moe.gov.lk

Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி:- 01 -** அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்பு தொடர்பில் அறிவூட்டமுள்ள பிரஜையாக செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்:- 1.4** பாடத்துறையோடு தொடர்புடைய பல்வேறு அணுகுமுறைகளை பயன்படுத்தி அரசறிவியலை கற்பார்.

**உப அலகு:- 1.04.1** அரசறிவியலை கற்பதற்கான அணுகுமுறைகள்.

## தத்துவார்த்த / மெய்யியல் / நியமம் சார் / இலட்சியவாத / அணுகுமுறை

- ஒவ்வொரு பாடமும் தனது பாடப்பரப்புக்கு உட்பட்ட விடயங்களை கற்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆய்வு முறைகளே அணுகு முறைகளாகும்.
- அரசறிவியல் அறிமுகமாகிய கி.மு 4ம் நூற்றாண்டில் இருந்தே அதனை கற்பதற்கான அணுகு முறைகளும் அதன் பாடப்பரப்போடு உருவாகி வளர்ச்சி அடைந்தது.
- பின்னர் 20ம் நூற்றாண்டிலேயே அதிகமான அணுகுமுறைகள் வளர்ச்சியடைந்துள்ளன.
- இவற்றுள் முதன்மையானதும் நீண்டகால நிலைப்பினைக் கொண்டதுமான அணுகுமுறையாகவும் மரபு ரீதியான அணுகுமுறைக் (Traditional Approach) குட்படும் ஒன்றாக 21ம் தத்துவார்த்த அணுகுமுறை காணப்படுகின்றது.

### தத்துவார்த்த அணுகுமுறை

"அரசியலின் உண்மை நிலையை அன்றி கற்பனையில் உதிக்கும் அரசியல் நிலையினைக் கற்பதற்கான ஆய்வியல் முறையே தத்துவார்த்த அணுகுமுறை ஆகும்".


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தத்துவார்த்த அணுகுமுறையை பயன்படுத்திய அரசியல் சிந்தனையாளர்கள்

| கிரேக்க கால சிந்தனையாளர்கள் | ஐரோப்பிய அரசியல் சிந்தனையாளர்கள் | 20ம் நூற்றாண்டு சிந்தனையாளர்கள் |
|---|---|---|
| பிளேட்டோ | சிசரோ | மகாத்மா காந்தி |
| அரிஸ்டோட்டில் | சென்.ஓகஸ்டின் | எனா ஏரேன்டி |
| | மாக்கியாவல்லி | ஜோன் ரோல்ஸ் |
| | தோமஸ்மூர் | சார்ள்ஸ் டெய்லர் |
| | தோமஸ் கொப்ஸ் | ஜெகன் காபர்மஸ் |
| | ஜோன் லொக் | |
| | ரூசோ | |
| | இமானுவேல் கான்ட் | |
| | ஹெகல் | |
| | பொஸாங்கியூ (Bosanque) | |
| | கார்ல்மாக்ஸ் | |

## தத்துவார்த்த அணுகுமுறையின் பண்புகள்

**உலகம் தொடர்பான அடிப்படைவாத (Fundamental) வினாக்களை வினவுதலும் அவற்றை விசாரணை செய்தலும்.**

- உலகம் என்பது யாது ?
- உலக இருப்பு எவ்வாறு இடம் பெறுகின்றது ?
- உலகம் தொடர்பில் அறிவியல் ரீதியாக நோக்க முடியுமா ?
- மனித வாழ்க்கை மற்றும் இருப்புக்கு அர்த்தம் உண்டா?
- வாழ்கை என்பது யாது ?


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**அரசியல் தொடர்பில் தத்துவவியாளர்கள் விசாரணை செய்யும் அடிப்படை வினாக்களுக்கான பரிசீலனை**

- அரசியல் என்பது யாது ?
- அரசு என்பது யாது?
- அரசின் நோக்கங்கள் யாவை ?
- அரசுக்கு மனிதன் ஏன் அடிபணிய வேண்டும் ?
- அரசுக்கும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பு யாது?

போன்ற வினாக்களை அரசியல் தத்துவவியாளர்கள் கலந்துரையாடலுக்கு முன்வைக்கும் அடிப்படை வினாக்களாகும். தத்துவவியலாளர்கள் உலகை விளங்கிக் கொள்வதற்கு நாங்கள் பயன்படுத்தும் எண்ணக் கருக்களின் விளக்கத்தினை தீர்த்துக் கொள்ளவும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் விசேட ஈடுபாட்டினை காட்டல்.

**உதாரணம்**

- நீதி, நியாயம், சமத்துவம், சுதந்திரம், உரிமைகள் போன்ற அரசறிவியலின் அடிப்படை எண்ணக்கருக்களினை அழமாகத்தேடுதல்.

**இலட்சியவாத அணுகுமுறை அரசியலின் இலட்சிய நோக்கங்கள் மீது காட்டும் அதிக ஈடுபாடு**

- இலட்சியம் (Normative) என்பதன் விளக்கம் “பெறுமானங்களின் முடிவுகளை” உள்ளடக்கியது என்பதாகும்.
- உலகில் ஏற்படும் விடயங்கள் குறித்து எம்மிடம் நல்லவை / தீயவை, சாதகம் / பாதகம் என்ற வகையில் பெறுமானத் தீர்மானங்கள் உண்டு. அவ்வாறானவையே இலட்சியத் தீர்மானங்களாகும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**உதாரணம்**

- கடுங் குற்றமிழைத்த ஒருவருக்கு மரண தண்டனையை கட்டாயமாக்க வேண்டுமா என்பது தொடர்பில் நன்மை / தீமை, சாதகம் / பாதகம் எனும் வகையில் பெறுமானங்கள் தொடர்பாக தீர்ப்பனவுகள் உண்டு.
- அதே போன்று உலக நிகழ்வுகள் தொடர்பாக பண்பு ரீதியாக மதிப்பிட்டு அளவீட்டுக் கருவிகளை எமக்கு வழங்குவதும் இலட்சிய எண்ணக் கருவின் மூலமாகும்.

**உதாரணம்**

- சுதந்திரம், சமத்துவம், நியாயத்தன்மை

**உதாரணம்**

- சமூக சமத்துவத்தை மதிப்பளிக்க வேண்டும்
- அரசியல் ஜனநாயக வழிமுறைக்குட்படவேண்டும



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல் தத்துவவியலில் காணப்படும் உயர்மட்ட அர்த்தப்படுத்தல்

- அரசியல் சிந்தனையானது கற்கையையும் ஆய்வினையும் மட்டுமன்றி அரசியல் நிறுவனங்களும் அவற்றின் நடைமுறையும் சமூகத்தின் பொது எதிர்பார்க்கைகளுக்கும் நன்மைகளுக்காகவும் அர்ப்பணத்துடன் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.
- அரசியல் கற்கையின் நோக்கம் அரசியல் தோற்றப்பாடுகள் யாவை என்பதை ஆராய்வதாக மட்டும் இருக்கக்கூடாது. அரசியல் நிறுவனங்களும் அவற்றின் நடைமுறையும் எவ்வாறு அமைய வேண்டும் என ஆலோசனை கூறுவதாக இருக்க வேண்டும்.

### தத்துவார்த்த அணுகு முறையின் பிரதான பண்புகள்

- எண்ணக்கரு விளக்கங்களை ஆழமாக ஆய்வு செய்தல்
- அரசியல் உலகின் பிரதான முரண்பாடுகளை வெளிப்படுத்தி விவாதிப்பது
- அரசியல் சிந்தனை இலட்சிய பண்பு தியாகம் தொடர்பில் ஈடுபாடு காட்டல்

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சுமி ஜனேந்திரன், அரசறிவியல் ஆசிரியர் (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு. க .வினுஜன், த.தொ.தொ ஆசிரியர் (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தத்துவார்த்த அணுகுமுறையின்

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| 1) அகநிலை நோக்கின் அடிப்படையில் விடயத்தை ஆராய முடியும் | 1) இவ்வணுகு முறையிலிருந்து பெறப்படும் முடிவுகள் நடைமுறைக்கு பொருந்தாது |
| 2) ஒரு நிச்சயமான தளத்தில் இருந்து கொண்டு பெறுமதிகளை அடையக் கூடியதாக இருத்தல் | 2) நிறுவனங்களையோ அவற்றின் நடைமுறையையோ உண்மையிலிருந்து விதிகள் வரை ஆராய்வதில்லை |
| 3) ஒரு விடயத்தை பெறுமானம் சார் தீர்ப்பின் அடிப்படையில் நோக்க முடியும் | |

## வினாக்கள்

1. தத்துவார்த்த அணுகு முறையை பயன்படுத்திய முன்னோடிகளின் பெயர்களை எழுதுக ?
   1. பிளேட்டோ 2. அரிஸ்ரோட்டில்

2. தத்துவார்த்த அணுகுமுறையின் 20ம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களில் இருவரின் பெயர்களை எழுதுக?
   1. மகாத்மா காந்தி 2. எனா ஏரேன்டி

3. அரசறிவியலின் தத்துவார்த்த அணுகு முறையின் முக்கியத்துவத்தை ஆராய்க ?

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சுமி ஜனேந்திரன், அரசறிவியல் ஆசிரியர் (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு. க .வினுஜன், த.தொ.தொ ஆசிரியர் (யா/வட்டு இந்துக்கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk